**செய்தி வெளியீடு எண்: 507** **நாள்: 01.08.2018**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு பி.எட். சேர்க்கை 2018-19 ஒற்றைச் சாளர முறையிலான கலந்தாய்வு 7 அரசு கல்வியியல் கல்லூரிகளுக்கும், 14 அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளுக்கும் என 21 கல்வியியல் கல்லூரிகளுக்கு 18.07.2018 முதல் 24.07.2018 வரை முதற் கட்ட கலந்தாய்வு விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் நிறைவுபெற்றது. தற்பொழுது அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் சேர்க்கைக்கான இடம் இருப்பதால் கீழ்க்கண்ட கால அட்டவணையின்படி 02.08.2018 முதல் 04.08.2018 வரை இரண்டாம் கட்ட கலந்தாய்வு விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற உள்ளது. மாணவர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) அனுப்பப்பட்டுள்ளது. விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவன இணைய தளத்தில் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. கலந்தாய்வில் பங்கேற்க வருவோர், ‘ The Secretary, Tamilnadu B.Ed. Admission, Chennai.” என்ற பெயரில் கலந்தாய்வு கட்டணத்தை வங்கி வரைவோலையாக கொண்டு வரவேண்டும். ஆதிதிராவிடர் (SC), பழங்குடியினருக்கு (ST) ரூ.1000/-, மற்றவர்களுக்கு ரூ. 2000/- கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| தமிழ்நாடு பி.எட். சேர்க்கை 2018-19<br>ஒற்றைச்சாளர முறை கலந்தாய்வு<br>இரண்டாம் கட்ட கலந்தாய்வு | | | |
|---|---|---|---|
| **நாள்** | **துறை<br>(Pedagogy subjects)<br>காலை 9.00 மணி** | **துறை<br>(Pedagogy subjects)<br>காலை 11.00 மணி** | **துறை<br>(Pedagogy subjects)<br>மதியம் 1.00 மணி** |
| 02.08.2018 | தாவரவியல்<br>விலங்கியல் | தமிழ்<br>ஆங்கிலம் | இயற்பியல் |
| 03.08.2018 | வரலாறு<br>புவியியல்<br>கணிப்பொறி அறிவியல் | பொருளியல்<br>வணிகவியல் | -- |
| 04.08.2018 | வேதியியல் | கணிதம் | -- |

**கல்லூரிக் கல்வி இயக்குநர்,**
**கல்லூரிக் கல்வி இயக்ககம்,**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**